

தீபத்திருவிழாவிற்கு வருகை தந்த ஆன்மிக பெருமக்களுக்கு திருவண்ணாமலை மாவட்ட திமுக மற்றும் தூய்மை அருணை அமைப்பின் சார்பில், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அறுசுவை உணவு வழங்குதலை தொடங்கி வைத்தார். உடன் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், எஸ். பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், ஏ.ஏ.ஆறுமுகம், குட்டி க.புகழேந்தி, ந.சீனுவாசன், சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், கு.கணேஷ், வேங்கிக்கால் பரத் உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. மற்றும் தூய்மை அருணை சார்பில்

# தீபத்திருவிழாவிற்கு வருகை தந்த 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு உணவு வழங்கல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, டிச. 4–

திருவண்ணாமலை, அண்ணா நுழைவு வாயில் அருகில்உள்ள, முத்தமிழறிஞர்கலைஞர்சிலைஅருகில், திருவண்ணாமலை மாவட்ட திமுக மற்றும் தூய்மை அருணை சார்பில் தீபத் திருவிழாவிற்கு வருகை தந்த ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு நேற்று (3.12.2025) காலை அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

உணவுவழங்கும்நிகழ்ச்சிக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர்டாக்டர்எ.வ.வே.கம்பன், நாடாளுமன்றஉறுப்பினர்சி.என். அண்ணாதுரை, தலைமைச் செயற்குழுஉறுப்பினர்இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ். பன்னீர்செல்வம், மாவட்டதுணை செயலாளர் பிரியா விஜயரங்கன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மீகப் பெருமக்கள் மற்றும் பொதுமக்களுக்கு, அறுசுவை உணவு வழங்குதலை, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு தொடங்கி வைத்தார்.

பின்னர்செய்தியாளர்களிடம் பேசும்போதுஙீகடந்த 20ஆண்டுகளாக தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் தீபத்திருவிழாமுன்னிட்டு, இங்கே அதுவும் குறிப்பாக கலைஞர் சிலைஅருகேஅறுசுவைஉணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதுகிரிவலபாதையில்உள்ளது.14.கி.மீ.கிரிவலப்பாதையை சுற்றிவருகிறஆன்மீகப்பெருமக்களுக்கு இங்கே அறுசுவை உணவு மாலை தீபம் ஏற்றுகிற 6.00 மணி வரை வழங்கப்படுகிறது.இதைநான்இங்கேதொடங்கி வைத்திருக்கிறேன்.

தொடர்ந்து செய்தியாளர்கள் பொதுமக்களுக்குசெய்திருக்கிற வசதி குறித்து கேட்டபோது ஙீ சென்ற ஆண்டே 40லட்சம் பேர் வருகை தந்தார்கள். அதற்குரிய வசதிகள் அரசால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சென்ற ஆண்டைவிட கூடுதலாக மக்கள் வருவார்கள் என்பதால்கார்கள்மற்றும்வாகனங்கள் நிறுத்துமிடம்தனியாகவும், பேருந்துகள்நிறுத்துமிடம்தனியாகவும், பலஇடங்களில்அரசின்அனுமதி பெற்று உணவு வழங்கும் நிகழ்ச்சிகள்எனஆன்மீகப்பெருமக்கள் போற்றும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையையேற்று சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொருமாதபௌர்ணமிஅன்றும் இங்கு அறுசுவை உணவு தொடர்ந்துவழங்கப்பட்டுவருகிறது.

இவ்வாறு செய்தியாளர்களிடம் பேசும் போது குறிப்பிட்டார்.

அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி காலை 9.00மணியிலிருந்துமாலைதீபம்ஏற்றுகிற6.00 மணிவரைநடைபெற்றது. கேசரி, வெண்பொங்கல், புளியோதரை, வெஜ்டேபிள் சாதம், தக்காளி சாதம் எலுமிச்சை சாதம், சர்க்கரை பொங்கல் என அறுசுவை சுடச்சுட வழங்கப்பட்டது. மாவட்ட பிரதிநிதி இல.குணசேகரன் தொமுச பரசுராமன் ஆகியோர் மேற்பார்வையில், திறமையான சமையல்காரர்களைக் கொண்டு சுவையாகவும், சுகாதாரமுறையிலும் சமைக்கப்பட்டது.

முன்னதாக திருவண்ணாமலை, திருக்கோயிலூர் சாலை ஆகாஷ்மகாலில், மாவட்டபொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் தலைமையில்பொதுமக்களுக்கு உணவு வழங்குதலை, பொதுப்பணித்துறைஅமைச்சர்எ.வ.வேலு தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில்மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, ஏ.ஏ. ஆறுமுகம், கு.கணேஷ், பகுதி செயலாளர்கள் சு.விஜி(எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டிக.புகழேந்தி, பொதுகுழு உறுப்பினர் அன்பரசி ராஜசேகரன், நகர நிர்வாகிகள் அ.கண்ணன், துரை வெங்கட், முன்னாள் அறங்காவலர் சினம்பெருமாள், வழக்கறிஞர் என்.முரளி, மாவட்ட துணைஅமைப்பாளர்கள்பா.அரிகிருஷ்ணன், வேங்கிக்கால்பரத், விமல்ராஜ், ஐடிஐ மணி, ஆனந்த், யுவராஜ், விக்ரம், டி.எம்.வெங்கடேசன், ஏ.எம்.பாஷா, ராயல். தியாகு, ஆ.தே.முருகையன், வேங்கிக்கால்வெற்றி, எஸ்.சங்கர்வடிவேல், சா.ரகுநாத் வட்ட செயலாளர்கள் மா.வினோத்குமார், எஸ்.கே.டி. வீரா, சங்கர், சி.கே.சசிகுமார், கே.வெங்கட், கே.ஆனந்தன், சக்தி கணேஷ், மணி (எ) விக்னேஷ், துரைமுருகன், கொரியர் சீனு உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டிற்கென உரிய முன்முயற்சிகளை ஒன்றிய அரசு எடுத்துள்ளதா?

## மக்களவையில் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!



புதுடெல்லி, டிச. 4–

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டிற்கென உரிய முன் முயற்சிகளை, ஒன்றிய அரசு எடுத்துள்ளதா? என்றும், மாங்குரோவ் காடுகளின் பரப்பளவு விரிவடைந்துள்ளதா? என்றும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பெருக்கவும், சுய உதவிக்குழுக்களை ஊக்குவிக்கவும் ஏதேனும் திட்டங்கள் ஒன்றிய அரசிடம் உள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம் விரிவான கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் காடுகள் துறையின் இணைஅமைச்சர் அளித்த பதில் வருமாறு:–

இந்திய கடற்கரை ஓரங்களில் உள்ள மாங்குரோவ் காடுகளை பாதுகாக்கவும் அவற்றின் பரப்பளவை பெருக்கவும், 2023–24ம் நிதியாண்டில் மாங்குரோவ் காடுகளுக்கென புதிய திட்டத்தை ஒன்றிய அரசு அறிவித்தது என்றும், இதன் மூலம் பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வந்த சிறு சிறு திட்டங்களை ஒருங்கிணைத்து மீனவர்களும், பெண்களின் சுய உதவிக் குழுக்களும் பயனடையும் வகையில் மாங்குரோவ் காடுகள் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தபட்டு வருகிறது.

2022–23 மற்றும் 2024–25ம் நிதியாண்டுகளில் நபார்டு மற்றும் பசுமை தமிழகம் ஆகிய திட்டங்களின் கீழ், தமிழ்நாடு அரசின் காடுகள் வளர்ப்புத் துறை 95 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகளின் பரப்பளவை அதிகரித்துள்ளது என்றும், 250ஹெக்டேர் காடுகள் மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது என்றும், 52000க்கும் அதிகமான மாங்குரோவ் கன்றுகள் நடப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நிதி யாண்டுகளில் அதாவது 2023–24 மற்றும் 2024–25ல் 13 மாநிலங்களில் 22560 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகள் புதுப்பிக்கப் பட்டுள்ளன என்றும், தமிழ் நாட்டில் 1082 ஹெக்டேர் அளவிற்கு மாங்குரோவ் காடுகள் சீரமைக்கப் பட்டுள்ளன என்றும் இவற்றினால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருவதோடு, பெண்கள் சுயஉதவி குழுக்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், ஒன்றிய அரசின் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்கள் விரிவான பதில் அளித்துள்ளார்.

### ஒரே நாளில் ரூ.302.73 கோடி வசூல்!

# புதிய மைல்கல்லை எட்டிய பதிவுத்துறை!

## அமைச்சர் பி.மூர்த்தி தகவல்!



சென்னை, டிச. 4–

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கிவரும் பதிவுத் துறையில் 01.12.2025 அன்று கார்த்திகை மாத சுப முகூர்த்த நாளில் ஆவணங்கள் அதிக அளவில் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் என்பதால் சிறப்பு நிகழ்வாக பொது மக்கள் பயன் பெறும் வகையில் கூடுதலாக முன்பதிவு வில்லைகளின் எண்ணிக்கை உயர்த்தி வழங்கப்பட்டது.

அதன்படி, பொது மக்கள் உயர்த்தப்பட்ட முன் ஆவணப்பதிவு வில்லைகளைப் பயன்படுத்தி கடந்த 01.12.2025 அன்று ஒரே நாளில் இதுவரையில் இல்லாத அளவில் ரூ.302.73/– கோடி (முந்நூற்று இரண்டு கோடியே எழுபத்து மூன்று இலட்சம் ரூபாய்) வருவாய் அரசுக்கு ஈட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நாள் வருவாய் வசூலில் புதிய மைல்கல்லை பதிவுத்துறை எட்டியுள்ளது என வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தெரிவித்துள்ளார்.


